R 5326 (page 301)

# தேவனோடு நன்கு பரிச்சயம் கொள்ளுங்கள்
# ACQUAINT YOURSELF WITH GOD

"பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும். ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்." - எபிரேயர் 5:14

இந்த வசனத்தில் அப்போஸ்தலர் மிகவும் அறிந்த ஒரு சரீர சம்பந்தமான உண்மையை பயன்படுத்தி, முக்கியமான ஒரு ஆவிக்குரிய சத்தியத்தை விளக்குகிறார். மானிட குழந்தைகளுக்கு பலமுள்ள ஆகாரம் அவர்களது ஜீரணத்தை கெடுத்துப்போடும். ஆனால் வயதாகும் போது பயன்படுத்தினால் மிகவும் நல்லது. அதேபோல ஆவிக்குரிய குழந்தைகளுக்கு சாதாரண சத்தியமே தேவைப்படுகிறது; அதன் மூலம் அவர்கள் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடைந்து, தெய்வீக திட்டத்தை பகுத்துணர கற்றுக்கொள்ளுவார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். பலமான ஆகாரம் பூரண வயதுள்ளவர்களுக்கு தகும் என்பதே நிச்சயமான உண்மை. பூரண வயதுள்ளவர்கள், தனக்கு தேவையான ஏற்ற உணவு எது, ருசியுள்ளது எது, பயனளிக்கக்கூடியது எது என்பதை அறிவுடன் தீர்மானிப்பார்கள். சில உணவுகளை சிலர் ஏற்றுக்கொள்ளுவார்கள். மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஒருவருக்கு ருசியுள்ளதாக இருக்கும் உணவு மற்றவருக்கு ருசியுள்ளதாக இருக்காது.

ஒருவர் ஒருவகையான உணவை சிறந்தது என்று பகுத்துணர்ந்து பயன்படுத்தினால் அதில் அவர் அபிவிருத்தியையும் பலத்தையும் பெறுவார். கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களுக்கும் இதே போல்தான். கர்த்தரின் உணவு மேஜையில் பலவிதமான உணவு வைக்கப்பட்டிருக்கும் போது நாம் அதில் எது இந்த நேரத்திற்கு தேவை என்பதை தேர்ந்தெடுப்போம்; சிலருக்கு விசுவாசம் தேவைப்படும்; சிலருக்கு பொறுமை, சிலருக்கு விடாமுயற்சி முதலானவை தேவைப்படும். ஒவ்வொருவரும் கிறிஸ்தவ அறிவிலும் அனுபவத்திலும் குறிப்பிட்ட அளவு அபிவிருத்திக்கு வருவதால், அவனது குணலட்சண குறைவுக்கு சத்திய வசனத்தின் எந்த அம்சம் தேவைப்படுகிறது என்பதை அவனால் தீர்மானிக்க முடியும். கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில் ஒருவரால் நன்மையையும் தீமையையும் பகுத்துணர இயலாது. ஒரு குழந்தைத்தன மனம் வேத வாக்கியங்களை

R5326 : page 302

தவறாக அர்த்தப்படுத்திக்கொள்ளலாம், அல்லது ஒரு சந்தர்ப்பத்தின் வசனத்தை வேறு வசனத்துடன் இணைத்து ஒரு தவறான முடிவுக்கு வரலாம். ஆனால் முதிர்ந்த மனத்தை உடையவர்கள் இப்படி வேதவாக்கியங்களை சேர்ப்பது தீங்கானது என்பதைக் காண்பார்கள்.

## நன்மை தீமையை குறைவாக உணருதல்

சில கிறிஸ்தவ ஜனங்கள் வேதாகம சத்தியங்களில் இடறி, அவற்றிலிருந்து தீமையை செய்வார்கள். உதாரணத்திற்கு, நமது நல்ல சகோதரன் கேல்வின் நன்மை, தீமையை தெளிவாக உணரவில்லை. அதன் பலனால், சபையின் தேர்வு குறித்த போதனையிலிருந்து நன்மையை பெறுவதற்கு பதிலாக, தீமையான போதனையை கொண்டு வந்தார். அதாவது தெரிந்தெடுக்கப்படாதவர்கள் நித்திய

தண்டனைக்குரியவர்கள் என்று கூறினார். அவரது புதிய சிந்தை சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிப்பதற்கு போதுமான அளவு அபிவிருத்தி அடையவில்லை. (2 தீமோத்தேயு 2:15) தேவனுடைய குணலட்சணத்தை போதுமான அளவுக்கு உணர்ந்து கொண்டவர்கள், தவறான போதனைகளுக்கு பதிலாக, தேவன் நமது மானிட இனத்தை அவர்களது சிருஷ்டிப்புக்கு முன் அவர்களை நித்திய தண்டனைக்கு அனுப்ப தீர்மானிக்கமாட்டார் என்பதை அறிந்து கொள்வார்கள்.

தற்கால ஜனங்களில் அநேகர் தங்களது உணர்வுகளை பொது அறிவுடன் அப்பியாசப்படுத்துவதில்லை. அவர்கள், ஒரு மனிதன் செய்ய நினைக்காததைக் கூட தேவன் செய்வதாக அவர் மேல் குற்றஞ் சுமத்துகிறார்கள். "அவர்களது உணர்வுகளை அப்பியாசப்படுத்துவதில்லை" என்ற இந்த சொற்றொடர் வெறும் மனதை மாத்திரமல்ல இருதயத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. சகோதரர் கேல்வின் வெளியரங்கமாக திறமையான சிந்தையை பெற்றிருந்தார்; ஆனல் அவரது இருதயம் தேவனுடனான உறவை பெற்றிருக்கவில்லை; ஏனெனில் கர்த்தருடைய குணலட்சணத்தை அவர் அறிந்திருந்தால், நித்திய ஆக்கினை என்கிற போதனை தேவனுடைய குணலட்சணத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் விரோதமானது என்பதை அறிந்திருப்பார். (எரேமியா 7:31;19:5)

சகோதரர் வெஸ்லி, கர்த்தரின் குணலட்சணத்தைக் குறித்த ஆவிக்குரிய உணர்வுகளில் அபிவிருத்தி அடைந்திருந்தார் என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். அவர் கேல்வினை விட வாத பொருத்தமுடையவராயிருந்தார் என்பதில் சந்தேகம் கொள்ளுகிறோம். ஆனால் அவர் தேவனுடனான இருதய உறவை பெற்றிருந்தார். கேல்வினால் சொல்லப்பட்டது போல தேவனால் திட்டமிட இயலாது என்று வெஸ்லி சரியானபடி தீர்மானித்தார். நமது சொந்த விஷயத்திலும் கூட நாம் மேலெழுந்தவாரியான அறிவை பெற்றிருக்கிறோம் என்பதையும் ஆனால் இன்னும் ஆவிக்குரிய வளர்ச்சியை, தேவனைப்பற்றி இருதய பூர்வமான அறிவை பெறவில்லை என்பதையும் நாம் அறிவோம். நாம் வேதாகமத்தின் அறிவுப்பூர்வமான ஆழ்ந்த அறிவையோ அல்லது வேதாகம வார்த்தைகளில் பரிச்சயத்தை மட்டும் பெற நாம் நாடாமல் வசனங்களுக்கு பின்னால் இருக்கிற உணர்வு பூர்வமானதை. ஆவியை பரலோகப் பிதாவின் குணலட்சணத்தை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் குணலட்சணத்தை, அவர்களின் ஆவியை, நாமும் பெறப்போகிற ஆவியை நாட வேண்டும்.

## ஆழமான ஆராய்ச்சி பயனுடையது

நமது கால ஜனங்களின் வேதாகம ஆராய்ச்சியைப் பற்றி பேசும் போது, அங்கே கொடுக்கப்படுகிற ஆழமான ஆவிக்குரிய சத்தியத்தை உணரவும் ஆராயவும் தவறுகின்றனர். அது மாத்திரமல்ல, அங்கே காணப்படுகிற பூலோக, சரித்திர மற்றும் மனத்தத்துவம் முதலானவைகளில் திருப்தி அடைகிறதாக காண்கின்றனர். இந்த நிலைமைகளை நாம் பார்ப்பதால், அப்போஸ்தலர் காலத்தைப் போலவே, தற்கால பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படை

**R5327 : page 302**

கொள்கைகளை மறுபடியும் போதிப்பது அவசியமானது என்று நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

இதே வழியில் அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறதாவது: "நீங்கள் வளரும்படி, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்." (1 பேதுரு 2:3) நம் அனைவருக்கும் சாதாரண காரியங்கள் தேவைப்படுகிறது. ஆனால்

வளர்ச்சியடையாத ஆவிக்குரிய குழந்தை முழு மனித பருவத்தை அடையாது. அவன் ஒரு ராஜாவாகவும் ஆசாரியனாகவும் ஆகவே முடியாது. அவன் தேவனுடனான உண்மையான பரிச்சயத்தை பெற வேண்டும். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.” தேவனைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவை பற்றியும் சும்மா அறிவது அல்ல, "அவர்களுடன் நன்கு பரிச்சயமாகக் கூடிய உணர்வுகளுடன் அறிவது ஆகும். நாம் அதே அறிவுடன் அவர்களை அறிந்து, அதில் வளர்ந்து, "தேவனுடைய ஆழங்களை ஆராய வேண்டும்."

-----------------------